செய்வதற்குண்டான ஆய்வை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலம் எப்போது அரசாங்கத்தால் பெறப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த நிலம் அரசினுடைய ஹைவேஸ் டிபார்ட்டுமென்டுக்கு - நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமான இடமாகும். அது ஒரு ஏரிப் பகுதியாக இருக்கிறது. அதன் முழுக் கருத்துருவும் அரசுக்கு வந்து ஆய்வு செய்தபின், அதிலே ஏரி நீர்ப் பிடிப்போ, மற்றவையோ இல்லாது இருப்பின் அந்த நிலத்தை வழங்கலாம் என்று அரசு கருதியபின் அந்த நிலம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 158, திரு. மு. வெங்கடராம ரெட்டி, இருக்கையில் இல்லை.

வினாக்கள் எண் 159 மற்றும் 160, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

குறுகிய கால வினா குறுகிய கால வினா எண் 1. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உட்காருங்கள். குறுகிய கால வினா ஒன்று இருக்கிறது. குறுகிய கால வினா எண் 1. திரு. கு. தங்கமுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

குறுகிய கால வினா எண் 1—

தந்தை பெரியார் கல்வி நிறுவனங்களை நிகர் பல்கலைக் கழகமாக மாற்றல்

***108791**—திரு. கு. தங்கமுத்து :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லத்தில் நடைபெற்றுவரும் தந்தை பெரியார் கல்வி நிறுவனங்களை நிகர் பல்கலைக் கழகமாக (Deemed University) மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 பிப்ரவரி 28]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தந்தை பெரியார் மணியம்மை பெயரில் அமைந்த கல்வி நிறுவனங்களை நிகர் பல்கலைக் கழகமாக (டீம்டு யூனிவர்சிடி) மாற்றுவதற்கு அதிகாரம் தமிழ்நாடு அரசுக்கு இல்லை. மத்திய அரசுக்கு உண்டு. தமிழக அரசு உரிய முறையில் மத்திய அரசுக்கு இதனைப் பரிந்துரை செய்தது. ஆனால், மத்திய அரசு இந்த நிறுவனங்களை நிகர் பல்கலைக் கழகமாக மாற்ற இயலாது என்று பதில் தந்திருக்கிறது.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய அத்தனை கொள்கைகளையும் திட்டங்களாக நிறைவேற்றிக் கொடுத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, அவருடைய திருப்பெயரைத் தாங்கியிருக்கின்ற தஞ்சை மாவட்டம் வல்லத்தில் இருக்கின்ற இந்த கல்வி நிறுவனம் மத்திய அரசால் நிகர் பல்கலைக் கழகமாக ஆக்குவதற்கு மறுத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். முழுக்க முழுக்க பெண்களே படிக்கின்ற இந்தக் கல்லூரிக்கு இந்தத் தகுதியை உருவாக்கிக் கொடுப்பதற்கு மறுபடியும் தமிழக அரசு முயற்சிக்குமா? எந்த வகையில் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் வல்லத்தில் தந்தை பெரியார் மணியம்மை கல்வி அறக்கட்டளைகளின் கீழ், பெரியார் செண்டினரி மகளிர் தொழில்நுட்பப் பயிலகம், பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரி, பெரியார் மருந்தியல் கல்லூரி (பார்மசூட்டிகல்ஸ் சயன்ஸ்) ஆகியவை சிறப்பாக இயங்கி வருகின்றன. புகழ் மிக்க நிறுவனமாக நடைபெற்று வருவதோடு, இவற்றில் தேவையான அனைத்து உள்கட்டமைப்புகளும், ஆய்வகங்களும் சிறப்பாக உள்ளன. கல்வித் தரமும் பாராட்டுக்குரியதாக இருக்கிறது. இந்தக் கல்வி நிறுவனங்களை இணைத்து நிகர் பல்கலைக் கழகமாக அனுமதிக்கின்ற பரிந்துரையை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்தார்கள். மத்திய அரசின் கீழ் இயங்கி வரும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் - (ஆல் இண்டியா கவுன்சில் ஆப் டெக்னிகல் எஜுகேஷன்) இதைப் பரிசீலித்து இதுபோல அதிகமான முன்மொழிவுகள் வந்திருப்பதாகவும் இவற்றுள் அரசு நிதியுதவிக்கான உத்தரவாதம் பெற்றவை மற்றும் சிறந்த கல்வித் தரம் உள்ளவை ஆகிய நிறுவனங்களை மட்டும் பரிந்துரைத்துள்ளதாகவும் தெரிவித்திருக்கிறது. பல்கலைக் கழக நிதியுதவிக் கழகமும் (யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன்) இதைப் பரிந்துரைக்கவில்லை.

[*1996 பிப்ரவரி 28*
முற்பகல் 11-10

எனவே இந்த நிறுவனங்களுக்கு Deemed University Status வழங்க இயலாது என மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை தெரிவித்து உள்ளது. பெரியார் கண்ட கனவான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் துணிவோடு போராடி 69 சதவிகித இட ஒதுக்கீட்டைக் காப்பாற்றி சமூகநீதி காத்த வீராங்கனை என்று அழைக்கப்படுபவர் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். தந்தை பெரியார் அவர்கள் பெயராலே சமூகநீதி விருது வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி பெரியாரின் புகழுக்குப் பெருமை சேர்த்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்கள் பாராட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு பெரியார் அறக்கட்டளைக்கு ரூ. 5 லட்சம் நிதியுதவி அளித்து பெருமை பெற்றவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். ஆதிதிராவிடர்களும் அர்ச்சகர்களாக வரவேண்டும் என்று கருவறை நுழைவுப் போராட்டத்தை அறிவித்த தந்தை பெரியார் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் திருச்சியில் வேத ஆகமக் கல்லூரியைத் தொடங்கி பெரியாரின் புகழுக்குப் பெருமை சேர்த்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு மகளிருக்கான கல்வி நிறுவனம் என்பதாலும், எல்லாத் தகுதிகளையும் பெற்றிருக்கிறது என்பதாலும் இதனை நிகர் பல்கலைக் கழகமாகத் தரம் உயர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அக்கறை கொண்டுள்ளார்கள். அகில இந்திய தொழில்நுட்பக் கழகம் தெரிவித்துள்ளபடி மாநில அரசின் நிதியுதவி தேவைப்பட்டால் ஏற்கனவே கோவை அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக் கழகத்திற்கு வழங்குவதைப்போல அதே அடிப்படையில் ஆண்டு மானியத் தொகை (Annual Block Grant) வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூகநீதி காக்கப் பாடுபட்ட தந்தை பெரியார் மணியம்மை பெயரால் அமைந்துள்ள இந்தக் கல்வி நிறுவனங்களை ஒன்றாக இணைத்து பல்கலைக் கழக அந்தஸ்துக்கு மேம்படுத்த வேண்டுமென்று சிறப்பாகப் பரிந்துரை செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நேர்முகக் கடிதம் ஒன்றை எழுத உள்ளார்கள்.

திரு. கு. தங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் திருப்பெயரைத் தாங்கியுள்ள இந்த நிறுவனங்களை நிகர் பல்கலைக் கழகமாக உயர்த்துவதற்கு இப்படியெல்லாம் முயற்சிகளை எடுத்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இது எவ்வளவு விரைவில் எந்தக் காலகட்டத்திற்குள் மேற்கொள்ளப்படும் என அறிய விரும்புகிறேன்.

1996 பிப்ரவரி 28]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடிய விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

150—

மணலூர்பேட்டையில் மின் மாற்றி அமைத்தல்

***37290**—திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணலூர்பேட்டை, மதூரா வடக்குதாங்கல் கிராமத்தில் மின் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

ஆம்.

158—

தளி ஊராட்சியைப் பிரித்தல்

*** 35765**—திரு. மு. வெங்கடராம ரெட்டி:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]